IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

**OS.No.112/2017**

| DEPOSITION OF WITNESS | DW.2 |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME | ரமேஷ் | TALUK | |
| FATHER NAME | செல்வம் | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | சேங்குன்றம் (பொறுப்பு) கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 01.12.2023

**2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை**

1. குடியாத்தம் வட்டாட்சியாருக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெறப்பட்டது. வட்டாட்சியாருக்கு பதிலாக என்னை சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் கொடுத்து சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றம் வந்துள்ளேன். ஆனால் அந்த அனுமதி கடிதம் நீ.ம.சா.ஆ.8 ஆகும்.

2. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள குடியாத்தம் வட்டம் எண்.68 மேல்முட்கூர் கிராமத்தில் நஞ்சை சர்வே எண்.12/எ1 சம்பந்தமான 1965 முதல் 2023 வரையுள்ள சிட்டா, பட்டா, அடங்கல், "அ" பதிவேடு எடுத்து வர அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ளது ஆனால் எங்கள் அலுவலகத்தில் பசலி ஆண்டு 1418 (2008), 1419, 1422 முதல் 1432 (2022) வரை எடுத்து வந்துள்ளேன் அதன் உண்மை நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவை நீ.ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக நீதிமன்றத்திலிருந்து ஆவணங்களை எடுத்து வர அழைப்பாணை அனுப்பப்பட்டதால் ஆவண பதிப்பகத்தில் அழைப்பாணை வைத்து உதவியாளர்கள் உதவியுடன் தேடிபார்ப்பது வழக்கம் அப்படி தேடிப்பார்த்தும் கிடைக்காததால் ஆவணங்களை எடுத்துவரவில்லை. வட்டாட்சியரின் உத்தரவுபடி தேடிப்பார்த்து கிடைக்கும்பட்சத்தில் எடுத்து வருவேன் மற்றும் சீனிவாசன் என்பவரின் இறப்பு சான்றிதழில் 20.06.2017 தேதியன்று மூ.மூ.பிடி.1972/17, அறிக்கை எண்.581 நாள்: 15.06.2017 என்ற வட்டாட்சியரின் உத்தரவின் நகலை எடுத்துவர நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. அந்த ஆவணங்கள் 2 ஆண்டுகளுக்கு மட்டும் தான் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் அதன் பின்னிட்டு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவிடுவோம் அதனால் அந்த ஆவணங்கள் தற்போது எங்களிடம் இல்லை.

3. பொதுவாக பிறப்பு மற்றும் இறப்பு ரிஜிஸ்டர் மட்டும் தான் சார்பதிவாளர்

அலுவலகத்திற்கு அனுப்பப்படும். உத்தரவு கடிதங்களை அனுப்பி விடுவார்களா என்று எனக்கு தெரியாது.

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. சர்வே எண்.12/1எ பசலி 1418 ல் விஸ்தீரணம் 0.78 ஏர்ஸ் சீனன் பெயரில் உள்ளது. பசலி 1419 லிருந்து முனிரத்தினம் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு 2013 இல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 12/எ1எ விஸ்தீரணம் 0.70.5 ஏர்ஸ் முனிரத்தினம் மற்றும் ஒருவர் பெயரில் உள்ளது மற்றும் 12/எ1பி விஸ்தீரணம் 0.02.5 ஏர்ஸ் ஆனந்த குழந்தைகள் மறுவாழ்வு மையம் ஸ்தாபக கிருபாகர பெயரில் உள்ளது

2. சர்வே எண்.12/எ1சி விஸ்தீரணம் 0.005.0 ஏர்ஸ் சரஸ்வதி பெயரில் உள்ளது. இன்று வரை மேற்சொன்ன 3 நபர்கள் பெயரில் தான் ஆவணங்கள் அடிப்படையில் சொத்து உள்ளது.

3. பொதுவாக பிறப்பு மற்றும் இறப்பு ரிஜிஸ்டர் மற்றும் மனு உத்தரவு கடிதம் ஆகியவைகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2 ஆண்டுகளுக்கு கழித்து அனுப்பிவிடுவோம். வட்டாட்சியர் அலுவலகத்தில் அதை பதிவேட்டில் குறித்து கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனைத்து ஆவணங்களையும் அனுப்பிவிடுவார்கள்.

4. 20.06.2017 ல் இறப்பு பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் குறிப்புகள் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றாலும் அதன்போல் எங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் சீனிவாசனின் இறப்பு பதிவாகவில்லை என்றால் சரிதான்.

5. 20.06.2017 தேதியன்று மூ.மூ.பிடி.1972/17, அறிக்கை எண்.581 நாள்: 15.06.2017 என்ற வட்டாட்சியரின் உத்தரவு கடிதம் எதுவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.